**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை: திரு.R.V. ராஜகுமார், B.L.,**
**தலைமை குற்றவியல் நடுவர், திருவில்லிபுத்தூர்**
**2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22–ஆம் நாள் திங்கட்கிழமை**
**<u>ஆண்டுப்பட்டிகை விசாரணை வழக்கு எண்.792/2019</u>**
CNR No.TNVR02-003994-2019

அரசுக்காக:–
காவல் ஆய்வாளர்,
மம்சாபுரம் காவல் நிலையம்,
குற்ற எண்.90/2019
இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) ...... குற்றமுறையிடுபவர்

**–எதிர்–**

சிவா, (வயது 26/2019),
த/பெ.பரமசிவம்,
நாடகசாலை தெரு,
திருவில்லிபுத்தூர். ...... எதிரி

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | எதிரி கடந்த 10.06.2019ம் தேதி காவல்துறையால் கைது செய்யப்பட்டு அன்றே காவல்நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 09.06.2019/09.10.2019 |
| 3. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| 4. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 23.01.2020 |

| | | | |
|---|---|---|---|
| 5. | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | M.P.No.05/2024 u/s.70(2) கு.வி.மு.ச.-ன் கீழ் 08.10.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>Crl.M.P.No.1896/2024 u/s.348 BNSS-ன் கீழ் 09.12.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>M.P.No.13/2025 u/s.70(2) கு.வி.மு.ச.-ன் கீழ் 13.06.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>M.P.No.20/2025 u/s.72(2) BNSS-ன் கீழ் 28.11.2025 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 6. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 21.09.2023 | 20.01.2025 |
| அ.சா.2 | 19.08.2024 | 20.01.2025 |
| அ.சா.3 | 04.07.2025 | 04.07.2025 |
| அ.சா.4 | 18.07.2025 | - |
| அ.சா.5 | 18.07.2025 | - |
| அ.சா.6 | 04.08.2025 | 04.08.2025 |
| அ.சா.7 | 11.08.2025 | - |
| அ.சா.8 | 25.08.2025 | - |
| அ.சா.9 | 15.09.2025 | 15.09.2025 |
| அ.சா.10 | 12.01.2026 | 12.01.2026 |

| | | |
|---|---|---|
| அ.சா.11 | 18.05.2026 | 18.05.2026 |
| அ.சா.12 | 08.06.2026 | 08.06.2026 |

7. கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி : 11.06.2026

8. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) : இல்லை

9. மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் : இல்லை

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண். 106(1)–ன் படி விபரங்கள்)**

1. வ.எண். : CC 792/2019

2. காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : மம்சாபுரம் காவல் நிலையம்,
குற்ற எண்.90/2019
இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)

3. **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்**

பெயர் : சிவா, (வயது 26/2019),
த/பெ.பரமசிவம்,

தகப்பனார் / கணவர் பெயர் : நாடகசாலை தெரு,
திருவில்லிபுத்தூர்.

தொழில் :

இருப்பிட முகவரி :

வயது

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 09.06.2019 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 09.06.2019 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | 10.06.2019 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 10.06.2019<br>(காவல்நிலைய பிணை) |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 21.09.2023 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 08.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 22.06.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை. |

13. கால தாமதத்திற்கான காரணம் : காவல்துறை தரப்பில் சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்ய கால தாமதம் ஏற்பட்டதால் வழக்கு நடவடிக்கைகளிலும் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது.

இவ்வழக்கானது முதலில் திருவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2– நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.792/2019 ஆக கடந்த 10.10.2019 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று, பின்பு திருவில்லிபுத்தூர் மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களின் கடித எண்.1622 நாள்.04.07.2024 நடவடிக்கையின்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு கடந்த 15.07.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 17.06.2026-ஆம் தேதி

இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.S. பரணீந்தர், M.A., LLB., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.ஞானபிரகாஷ்,B.A.,LLB., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**1.** கடந்த 09.06.2019 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கோவிந்தன் என்பவர் இடையன்குளம்–இராஜபாளையம் தென்வடல் மெயின்ரோட்டில், மேற்படி ரோட்டிற்கு மேற்குபக்கம் வடக்கிலிருந்து தெற்காக நடந்து சென்றுகொண்டிருந்தபோது மேற்படி ரோட்டில் கோவிந்தனுக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்காக எதிரி சிவா என்பவர் TN 84 F 8418 எண்ணுள்ள TATA ACE வண்டியில் வீட்டுச்சாமான்களை ஏற்றிக்கொண்டும், வண்டியின் வலதுபக்கம் சைக்கிள் ஒன்றை கட்டிக்கொண்டும் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் மேற்படி வண்டியை ஓட்டி வந்து மேற்படி கோவிந்தன் மீது தட்டிவிட்டு மோதியுள்ளார் என்றும், அதனால் கீழே விழுந்த கோவிந்தனுக்கு இடதுகால் தொடையில் வீக்க காயம் ஏற்பட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என்றும், இவ்வழக்கில் மேற்படி கோவிந்தனின் இறப்பிற்கு எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்றும், எனவே, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும் மம்சாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு இதச பிரிவுகள் 279,

304(A)-ன் படி குற்றம் குறித்து வினவியபோது, எதிரி பொய்வழக்கு என மறுத்துள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 09.06.2019 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் எதிரி சிவா என்பவர் TN 84 F 8418 எண்ணுள்ள TATA ACE வண்டியின் வலதுபக்கம் சைக்கிள் ஒன்றை கட்டிக்கொண்டு திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் சென்று கொண்டிருந்தபோது இறந்துபோன சாட்சி கோவிந்தன் என்பவர் டீக்கடையில் டீ குடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது பின்னால் மேற்படி வண்டியை எதிரி ஓட்டி வந்து மேற்படி கோவிந்தன் மீது தட்டிவிட்டு மோதியுள்ளார். அதனால் கீழே விழுந்த கோவிந்தனுக்கு வலதுகால் தொடையில் வீக்க காயம் ஏற்பட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது மேற்படி கோவிந்தன் கொடுத்த அ.சா.ஆ.7–புகார் வாக்குமூலத்தை அ.சா.9–தலைமை காவலர் பாண்டியராஜ் என்பவர் பதிவு செய்து சாட்சியாக கோவிந்தனின் மகன் அ.சா.1–வைரவன் என்பவரிடம் அறிவேன் சாட்சி கையொப்பம் பெற்று அன்றே (09.06.2019) 18.00 மணிக்கு நிலையம் வந்து குற்ற எண்.90/2019, இதச பிரிவு 279, 337–இன் கீழ் அ.சா.ஆ.8–முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்பு மேற்படி வழக்கினை அ.சா.11–சார்பு ஆய்வாளர் ரமேஷ் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 18.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி பண்ணையார், அ.சா.2–சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.2–பார்வைமகசர் மற்றும் அ.சா.ஆ.10–மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், 10.06.2019 ஆம் தேதி நிலையம் ஆஜரான எதிரி சிவா என்பவரை கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தும், இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு திருவில்லிபுத்தூர்

அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மேற்படி கோவிந்தன் 28.06.2019 ஆம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் வழக்கினை இதச பிரிவு 279, 337–லிருந்து இதச பிரிவு 279, 304(A)– ஆக சட்டப்பிரிவை மாற்றி அ.சா.ஆ.11–சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் கோவிந்தன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.12–பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தும், பின்னர் இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ள அ.சா.8–முதல்நிலை காவலர் மணிகண்டன் என்பவரை நியமித்து பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை அனுப்பி வைத்தும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 84 F 8418 என்ற TATA ACE வாகனத்தை ஆய்வு செய்த அ.சா.10–மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9–ஆய்வறிக்கை பெற்றும், மேற்படி வாகனத்தின் உரிமையாளர் முத்துக்குமார் என்பவரையும், முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.9–தலைமை காவலர் பாண்டியராஜ் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், மேற்படி வழக்கினை அ.சா.12–காவல் ஆய்வாளர் பவுல்யேசுதாசன் என்பவர் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சி அ.சா.8–முதல்நிலை காவலர் மணிகண்டன் என்பவரையும், அ.சா.11–சார்பு ஆய்வாளர் ரமேஷ் என்பவரையும், காயம்பட்ட சாட்சி கோவிந்தன் என்பவருக்கு சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.6–சுரேஷ்குமார் என்பவரையும், இறந்துபோன கோவிந்தனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ.4–பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய அ.சா.7–மருத்துவர் சுகன்யாதேவி என்பவரையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)–இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5)** அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு

313(1)(b)–இன்படி வினவியபோது எதிரி சாட்சியங்களை பொய் எனக் கூறி மறுத்து தனது தரப்பில் சாட்சிகள் உண்டு என்று கூறியுள்ளார். பின்பு எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6) தீர்வுக்குரிய பிரச்சனை :–**

அரசு தரப்பால் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**7)** கடந்த 09.06.2019 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கோவிந்தன் என்பவர் இடையன்குளம்–இராஜபாளையம் தென்வடல் மெயின்ரோட்டில், மேற்படி ரோட்டிற்கு மேற்குபக்கம் வடக்கிலிருந்து தெற்காக நடந்து சென்றுகொண்டிருந்தபோது மேற்படி ரோட்டில் கோவிந்தனுக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்காக எதிரி சிவா என்பவர் TN 84 F 8418 எண்ணுள்ள TATA ACE வண்டியில் வீட்டுச்சாமான்களை ஏற்றிக்கொண்டும், வண்டியின் வலதுபக்கம் சைக்கிள் ஒன்றை கட்டிக்கொண்டும் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் மேற்படி வண்டியை ஓட்டி வந்து மேற்படி கோவிந்தன் மீது தட்டிவிட்டு மோதியுள்ளார். அதனால் கீழே விழுந்த கோவிந்தனுக்கு இடதுகால் தொடையில் வீக்க காயம் ஏற்பட்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்து போயுள்ளார், எனவே, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்பது அரசு தரப்பு வழக்கு ஆகும்.

**8)** இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தனின் மகனான அ.சா.1–வைரவன், அ.சா.3–முத்துக்குமார் விபத்து சம்பவம் பற்றி கேள்விபட்டது பற்றியும், அ.சா.2 – சிலம்பரசன் சம்பவயிடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரி வரைபடம் தயாரித்தது சம்பந்தமாகவும், அ.சா.4–கோபி, அ.சா.5–முத்தம்மாள் ஆகியோர் சம்பவ சாட்சிகளாகவும், அ.சா.6–மருத்துவர் சுரேஷ்குமார், விபத்தில் காயம்பட்ட கோவிந்தனுக்கு சிகிச்சையளித்தது சம்பந்தமாகவும், மேற்படி

கோவிந்தன் சிகிச்சை பலனின்றி இறந்தது சம்பந்தமாகவும், அ.சா.7–மருத்துவர் சுகன்யாதேவி மேற்படி கோவிந்தனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தது சம்பந்தமாகவும், அ.சா.8–முதல்நிலை காவலர் மணிகண்டன் பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை அவரது உறவினரிடம் ஒப்படைத்தது பற்றியும், அ.சா.9 – தலைமை காவலர் பாண்டியராஜ் என்பவர் புகார்மனுவை பெற்று முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்பந்தமாகவும், அ.சா.10–மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்தது சம்பந்தமாகவும், அ.சா.11 சார்பு ஆய்வாளர் ரமேஷ் மற்றும் அ.சா.12 – காவல் ஆய்வாளர் பவுல்யேசுதாசன் ஆகியோர் புலன்விசாரணை செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாகவும் சாட்சியமளித்துள்ளனர்.

9) புகார்தாரரான இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கோவிந்தன் தனது அ.சா.ஆ.7–புகார்மனுவில், **"....கடந்த 09.06.2019 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் இடையன்குளம்–இராஜபாளையம் தென்வடல் ரோட்டில் மேற்குபக்கம் வடக்கிலிருந்து தெற்காக நடந்து சென்றுகொண்டிருந்தபோது தனக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்காக TN 84 F 8418 எண்ணுள்ள TATA ACE வண்டியை பின்னால் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த ஸ்ரீவில்லிபுத்தூர் நாடகசாலை தெரு, பரமசிவம் மகன் சிவா என்பவர் மேற்படி TATA ACE வண்டியில் வீட்டுச்சாமான்களை ஏற்றிக்கொண்டும், வண்டியின் வலதுபக்கம் சைக்கிள் ஒன்றை கட்டிக்கொண்டும் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து தன்மீது மோதிவிட்டதால் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தனக்கு இடதுகால் தொடையில் வீக்க காயம் ஏற்பட்டதாகவும், தன்னை தனது மகன் வைரவன் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தான்..."** என்று கூறியுள்ளார். ஆனால் மேற்படி கோவிந்தன் கடந்த 28.06.2019 அன்று சிகிச்சை பலனின்றி இறந்துபோய்விட்டார், அதனால் அவர் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட மேற்படி வழக்கு சம்பவத்தில் இறந்துபோன மேற்படி கோவிந்தனின் மகனும், மேற்படி கோவிந்தன்

கொடுத்த புகார்வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்திட்ட கோவிந்தனின் மகனான அ.சா.1–வைரவன் தனது சாட்சியத்தில், **"....கடந்த 09.06.2019 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு எதிரி TATA ACE, TN 84 F 8418 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை வலதுபுறத்தில் சைக்கிளை கெட்டிக்கொண்டு திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையம் சென்று கொண்டிருந்தபோது அங்கு தனது அப்பா கோவிந்தன் டீக்கடையில் டீ குடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது பின்னால் வந்த எதிரி மேற்படி வண்டியால் தனது அப்பாவை இடித்துவிட்டார்....."** என்று சாட்சியமளித்திருந்தாலும், அவர் தனது குறுக்குவிசாரணையின்போது அவர் அண்ணி முத்தம்மாள் என்பவர் விபத்து குறித்து போன் மூலமாக தகவல் சொன்னதாகவும், தான் கால்மணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் மேற்படி அ.சா.ஆ.7– புகார்வாக்குமூலத்தில் மேற்படி அ.சா.1 சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படவில்லை. எனவே, அ.சா.1 மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை.

**10)** மேலும் வழக்கு சம்பவத்தை கேள்விபட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3– முத்துக்குமார் என்பவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், **"....எதிரியான சிவா என்பவர் மேற்படி தனக்கு சொந்தமான TN 84 F 8418 வண்டியின் டிரைவராக இருந்ததாகவும், 2019 ஆம் ஆண்டு 6 வது மாதம் எதிரி சிவா போன் மூலமாக தன்னிடம் மம்சாபுரத்திலிருந்து ராஜபாளையத்திற்கு மேற்படி வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது இடையன்குளம் அருகில் ஒரு பெரியவரை தட்டிவிட்டதாகவும், அந்த வண்டியை சுமார் 200 மீ தள்ளி நிறுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார்...."** என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்படி சம்பவத்தின்போது எதிரி மேற்படி விபத்து ஏற்படுத்திய அ.சா.3–ற்கு சொந்தமான வாகனத்தில் ஓட்டுநராக இருந்துள்ளார் என்பது தெரிய வந்தாலும், மேற்படி அ.சா.3–இன் சாட்சியமானது நேரடியான சம்பவ சாட்சி இல்லை என்பதால் மேற்படி அ.சா.3–இன் சாட்சியம் எதிரியின் மீதான குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இல்லை.

**11)** அரசு தரப்பில் சம்பவ சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.4–கோபி மற்றும் அ.சா.5–முத்தம்மாள் ஆகியோர் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவற்று பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளனர். எனவே, சம்பவ சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியமும் அரசு தரப்பிற்கு ஆதரவானதாக இல்லை.

**12)** பார்வைமகசர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2–சிலம்பரசன் என்பவரின் சாட்சியமானது வழக்கு சம்பவயிடத்தை சார்பு ஆய்வாளர் பார்வையிட்டுள்ளார் என்பதற்குதான் ஆதரவாக உள்ளதே தவிர எதிரியின் மீதான கவனக்குறைவான மற்றும் அஜாக்கிரதையான செய்கையை தீர்மானிக்க போதுமானதாக இல்லை.

**13)** மேலும் இறந்துபோன கோவிந்தன் என்பவருக்கு சிகிச்சையளித்த அ.சா.6–இன் சாட்சியமானது மேற்படி விபத்தில் காயம்பட்டு இறந்துபோன கோவிந்தன் என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதனை நிரூபிக்க போதுமானதாக உள்ளதே தவிர மேற்படி காயமானது எதிரியின் கவனக்குறைவினாலோ அல்லது அஜாக்கிரதையான செயலினால்தான் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை. மேலும் மேற்படி கோவிந்தனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த அ.சா.7–இன் சாட்சியமானது மேற்படி கோவிந்தன் காயங்கள் ஏற்பட்டு இறந்துள்ளார் என்பதனை நிரூபிக்க உதவியாக உள்ளதே தவிர மேற்படி எதிரியின் கவனக்குறைவு, அஜாக்கிரதை மற்றும் அதிவேகம் ஆகியவற்றை நிரூபிக்க போதுமானதாக இல்லை.

**14)** அ.சா.10–இன் சாட்சியமானது மேற்படி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் பற்றி அறிந்துகொள்ளத்தான் உதவியானதாக உள்ளதே தவிர எதிரியின் மீதான குற்றத்தை நிரூபிக்க அவரின் சாட்சியம் போதுமானதாக இல்லை. மேலும் மேற்படி அ.சா.8, அ.சா.9, அ.சா.11 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சாட்சியமானது இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தல் மற்றும் புலன்விசாரணை சம்பந்தமாகத்தான் உள்ளதே தவிர எதிரியின் மீதான

குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இல்லை. எனவே, மேற்படி எதிரியின் மீதான இதச பிரிவுகள் 279, 304(A) ஆகிய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை.

**15)** இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச்சட்டத்தின் மேற்படி பிரிவுகள் பின்வருமாறு கூறுகின்றன.

**279 – Rash driving or riding on a public way** – Whoever drives any vehicle, or rides, on any public way in a manner so rash or negligent as to endanger human life, or to be likely to cause hurt or injury to any other person, shall be punished with imprisonment if either description for a term which may extend to six months, or with fine which may extend to one thousand rupees, or with both.

**304 A. – Causing death by negligence –** Whoever cause the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.

ஆனால் மேற்படி பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள உட்கூறுகள் எதுவும் இவ்வழக்கில் பூர்த்தியாகவில்லை. மேலும் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையே மிகுந்த முரண்பாடு காணப்படுகிறது. மேலும் சம்பவயிடத்தை சுற்றியுள்ள நபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மொத்தத்தில் அரசு தரப்பு வழக்கானது தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்யலாம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)–ன் படி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)–இன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் இந்த வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி மேல்முறையீட்டு

காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, **2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22–ஆம் நாளாகிய** இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.06.22 18:08:24 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

அ.சா.1 திரு.வைரவன்

அ.சா.2 திரு.சிலம்பரசன்

அ.சா.3 திரு.முத்துக்குமார்

அ.சா.4 திரு.கோபி

அ.சா.5 திருமதி.முத்தம்மாள்

அ.சா.6 திரு.சுரேஷ்குமார் (மருத்துவர்)

அ.சா.7 திருமதி.சுகன்யாதேவி (மருத்துவர்)

அ.சா.8 திரு. மணிகண்டன் (முதல்நிலை காவலர்)

அ.சா.9 திரு.பாண்டியராஜ் (தலைமை காவலர்)

அ.சா.10 திரு.கார்த்திகேயன் (மோட்டார் வாகன ஆய்வாளர்)

அ.சா.11 திரு.ரமேஷ் (சார்பு ஆய்வாளர்)

அ.சா.12 திரு.பவுல்யேசுதாசன் (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

அ.சாஆ.1 புகார்வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி என்ற இடத்தில் உள்ள அ.சா.1–வைரவனின் கையொப்பம்

அ.சாஆ.2 பார்வைமகசர்

அ.சாஆ.3 விபத்தில் இறந்துபோன கோவிந்தனின் விபத்து பதிவேடு

அ.சாஆ.4 விபத்தில் இறந்துபோன கோவிந்தனின் பிரேத பரிசோதனை அறிக்கை

அ.சாஆ.5 பிரேத பரிசோதனை அலுவலுக்கு அ.சா.8– முதல்நிலை காவலர் மணிகண்டன் என்பவருக்கு வழங்கப்பட்ட காவல்நிலைய கடவுச்சீட்டு

அ.சாஆ.6 கோவிந்தனின் பிரேதத்தை ஒப்படைத்தற்கான ஒப்புகை சீட்டு

அ.சாஆ.7 புகார்வாக்குமூலம்

அ.சாஆ.8 முதல்தகவல் அறிக்கை

அ.சாஆ.9 TN 84 F 8418 என்ற டாடா ஏசிஇ வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை

அ.சாஆ.10 மாதிரி வரைபடம்

அ.சாஆ.11 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

அ.சாஆ.12 விபத்தில் இறந்துபோன கோவிந்தனின் பிரேத விசாரணை அறிக்கை

<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u> – இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>குறிப்பு–</u>

1) வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2) வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3) சாட்சிகள் 3 கேட்புகளுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.06.22 18:08:32 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவில்லிபுத்தூர்.

Chief Judicial Magistrate Court,
Srivilliputhur.
C.C.No.792/2019
Judgment
Dated: 22.06.2026